(முற்பகல் 11-50).

(ஆ) அம்பைத் தொகுதியில் காட்டுப் பன்றிகளைக் கொல்லும் விவசாயிகளை காட்டு இலாக்கா அதிகாரிகள் மிரட்டுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஆர். கிருஷ்ணன், டி. ஞானசிகாமணி, பி. எச். பாண்டியன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. தே. ஞானசிகாமணி: தலைவர் அவர்களே, '' திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அம்பைத் தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலை ஓரங்களில் உள்ள நஞ்சை, புஞ்சை நிலங்களில் பயிர்களை அழித்து வரும் மலைப் பன்றிகளைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளைக் காட்டு இலாகா அதிகாரிகள் மிரட்டுவதால் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து '' என்கிற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, என் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளதால் சேரன்மாதேவியையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் அம்பை தொகுதியில் உள்ள மேற்கு மலைத் தொடர் பகுதியில் காட்டுப் பன்றிகள் விவசாயப் பயிர்களுக்கு சேதம் விளைவிப்பது சில சமயங்களில் நடக்கக்கூடிய நிகழ்ச்சியாகும். 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் அமுலுக்கு வந்த பின்பு மேற்படி சட்டத்தின் அட்டவணை III-ல் காட்டுப் பன்றிகள் சேர்க்கப்பட்டுள்ளதால் அவைகளை வரைமுறையின்றி கொல்வது அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், 1975 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வனவிலங்கு பாதுகாப்பு விதிகள் 10 இன்கீழ் குறிப்பிட்டுள்ள உரிமக் கட்டணத்தை செலுத்தியபின், தலைமை கானுயிர் காப்பாளரிடமிருந்து முறையான உரிமம் பெற்றபின் காட்டுப் பன்றிகளைக் கொல்லலாம். இந்த விதிகளின்படி 1977–78-ல் முண்டந்துறை வனவிலங்கு காப்பாளர் 13 உரிமங்களை வழங்கியுள்ளார். அக்டோபர் மாதம் வரை நடப்பு ஆண்டில் வழங்கியுள்ள உரிமங்களின் எண்ணிக்கை 17 ஆகும்.

1979 மார்ச் 17] [திரு. ஆர். எம். வீரப்பன்]

ஆகையால், காட்டுப்பன்றிகளைக் கொல்வதற்கான உரிமங்கள் தாராளமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் பயிர்களை நாசப்படுத்தும் காட்டுப்பன்றிகளைச் சுட்டுக் கொல்ல விரும்பும் விவசாயிகளுக்குத் தேவையான அனுமதிகளை வழங்க சம்பந்தப்பட்ட வனவிலங்கு காப்பாளருக்கு, தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சட்ட விதிகளின்படி அனுமதி பெறாமல், வேட்டையாட முயற்சிக்கும் நபர்களின் மீது, வனத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முற்பட்டிருக்கலாம். இந்த, சங்கடங்களைத் தவிர்க்க முறையாக விண்ணப்பிதது, காட்டுப் பன்றிகளைக் கொல்ல அனுமதிப் பெற்றுக் கொள்வதில் தடை ஒன்றும் இல்லை. எனவே, காட்டுப் பன்றிகளால் பயிர் நாசமடைவதைத் தடுக்க முயற்சிக்கும் விவசாயிகளை வனத்துறை அதிகாரிகள் மிரட்டுகிறார்கள் என்பதற்கு ஆதாரமில்லை. இதன் காரணமாக அம்பாசமுத்திரம் பகுதியில் விவசாயிகளிடையே பதட்ட நிலை ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது பதட்ட நிலை இல்லை என்று சொன்னார்கள். குறிப்பாக, சேரன்மாதேவி பகுதியில் எலுமிச்சம்பழத்தை வைத்துத்தான் பன்றிகளை விரட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். எல்லோராலும் துப்பாக்கி வாங்க முடியாது. ஆகவே, கல்வீச்சி விரட்டுவதற்கு அனுமதி அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, சட்டத்திலே சுட்டுக் கொல்வதற்குத்தான் அனுமதி வழங்கலாம் என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் புதிய முறையைச் சொல்கிறார்கள். அவர்கள் முறையாக அரசுக்கு எழுதித் தருவார்களானால் உடனடியாக அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) புகுமுக வகுப்புகளுக்கு உரிய பாடங்கள் கல்லூரிகளில் முடிக்கப்பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. மணிமாறன் அவர்கள் ஒரு அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, ''தமிழ் நாட்டிலுள்ள பெரும்பான்மையான கல்லூரிகளில் இன்னும் புதுமுக வகுப்புகளுக்கு உரிய பாடங்களை முடிக்கப் பெறாமல் இருக்கும்போது தேர்விற்காக மாணவர்களுக்கு படிப்பு